# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.191/2024</u>

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேதகூராய்வுஅறிக்கை ம.சா.ஆ.2, இறப்புசான்றுநகல் ம.சா.ஆ.3, வாரிசுசான்றுநகல் ம.சா.ஆ.4, மனுதாரர்களின் ஆதார்அட்டைநகல்கள் முறையே ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.7, நவீனின் பிறப்பு சான்று நகல் ம.சா.ஆ.8, பள்ளி மாற்று சான்று நகல் ம.சா.ஆ.9,

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்திற்கு யார் காரணம் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். புகாரில் கூறப்பட்டுள்ள விவரங்கள் உண்மையள்ள என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்கிறேன். என்மனைவி கூலி வேலை செய்கிறார். 3ம் மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலைசெய்கிறார். என்னுடைய, என்மனைவியின் வருமானம் மூலம் குடும்பம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இறந்துபோன என்மகனின் வருமானத்தை வைத்தும் குடும்பம்

நடத்தினேன். இறந்துபோன மகனுக்கு திருமணம் ஆகவில்லை. நானும், 3ம் மனுதாரரும் இறந்துபோன மகனுக்கு சட்டப்படியான வாரிசுகள் இல்லையென்றும், மனுவை எங்களை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்மகன் தனியார் நிறுவனத்தில் வேலைபார்த்து வருமானம் ஈட்டிவந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மகன் வருமானவரி செலுத்தவில்லை. என்மகன் இறப்பினால் என்குடும்பத்திற்கு வருமான இழப்பு கிடையாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மோட்டார்சைக்கிளில் மொத்தம் 3பேர்கள் பயணம் செய்தார்கள் என்றால்சரிதான். 3பேர் மோட்டார்சைக்கிளில் சென்று பஸ்சை முந்தி செல்ல முயற்சிக்கும்போது பஸ்சில் உரசி கீழே விழுந்து விபத்துஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் மனுவிலும், நிருபணவாக்குமூலத்திலும்கூறியது போன்று விபத்து நடக்க வில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் காரணம் இல்லையென்றும் , மோட்டார்சைக்கிளை ஓட்டியவர் தான் காரணம் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.